**கிராமின் கிருஷி மவுசம் சேவா**
இந்திய வானிலை துறை
தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகம்
கோவை, தமிழ்நாடு

# அக்ரோமெட் ஆலோசனை புல்லட்டின்

**தேதி : 26-12-2023**

**தி -நீல்கிரிஸ்(தமிழ்நாடு) வானிலை முன்னறிவிப்பு - அன்று வெளியிடப்பட்ட :2023-12-26 ( அடுத்த 5 நாட்களில் 8:30 IST வரை செல்லுபடியாகும்)**

| வானிலை காரணி | 2023-12-27 | 2023-12-28 | 2023-12-29 | 2023-12-30 | 2023-12-31 |
|---|---|---|---|---|---|
| மழையளவு (மி.மீ ) | 0.0 | 0.0 | 2.0 | 1.0 | 2.0 |
| அதிக பட்ச வெப்பநிலை ( oசெ ) | 22.0 | 22.0 | 21.0 | 21.0 | 20.0 |
| குறைந்த பட்ச வெப்பநிலை (o செ ) | 11.0 | 10.0 | 10.0 | 9.0 | 8.0 |
| அதிக பட்ச காற்றின் ஈரப்பதம் (%) | 80 | 90 | 90 | 90 | 90 |
| குறைந்த பட்ச காற்றின் ஈரப்பதம் (%) | 40 | 60 | 60 | 60 | 60 |
| காற்றின் வேகம் (கி.மீ./மணி ) | 8 | 8 | 8 | 6 | 6 |
| காற்றின் திசை (கோணம்) | 90 | 90 | 110 | 110 | 110 |
| மேக மூட்டம் (ஆக்டா) | 4 | 6 | 6 | 6 | 7 |

## வானிலை சுருக்கம் / எச்சரிக்கை:

வரும் நாட்களில் வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் இருந்து மேகமூட்டத்துடன் காணப்படும். முதல் மற்றும் இரண்டாவது நாளில் மழை பெய்ய வாய்ப்பில்லை எனவும், மூன்றாவது, நான்காவது மற்றும் ஐந்தாவது நாளில் மிக லேசான மழையும் பெய்யும் என எதிர்பார்க்கப்படுகிறது. அதிகபட்ச வெப்பநிலை 20-22°செஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலை 8-11°செஆகவும் இருக்ககூடும். காலை நேர காற்றின் ஈரப்பதம் 80-90 சதவிகிதமாகவும், மாலை நேர காற்றின் ஈரப்பதம் 40- 60 சதவிகிதமாகவும் இருக்ககூடும்.சராசரியாக காற்றின் வேகம் மணிக்கு 06-08 கி.மீஅளவுக்கு வீசக்கூடும்.

## பொது ஆலோசனை:

குருமிளகாயில் வாடல் நோயைக் கட்டுப்படுத்த, விவசாயிகள் காப்பர் ஆக்ஸிகுளோரைடு @ 0.2% (மண்ணை அள்ளுதல்) அல்லது பொட்டாசியம் பாஸ்போனேட் @ 0.3% அல்லது மெட்டாலாக்சில் @ 0.1% பயன்படுத்த பரிந்துரைக்கப்படுகிறது. மழை இல்லாத நேரங்களில் தெளிக்க வேண்டும்.

## குறுஞ்செய்தி :

| |
|---|
| உருளைக்கிழங்கு பயிரில் இலை கருகல் நோயைக் கட்டுப் படுத்த, நடவு செய்த 45, 60 மற்றும் 75 நாட்களில் மான்கோசெப் @ 2 கிராம்/லி அல்லது குளோரோதலோனில் @ 2 கிராம்/லி என்ற அளவில் இலைவழி தெளிக்க வேண்டும். |

**தோட்டக்கலை குறிப்பிட்ட ஆலோசனை:**

| தோட்டக்கலை | தோட்டக்கலை குறிப்பிட்ட ஆலோசனை |
|---|---|
| தேயிலை | தேயிலைப் பயிரில் கொப்புள நோயைக் கட்டுப்படுத்த: அ. பஞ்சகவ்யா மற்றும் தசகவ்யா 2% (1 & 2 வது தெளித்தல்) ஆ. காப்பர் ஆக்ஸிகுளோரைடு 2 கிராம் / லிட்டர் தெளிக்க வேண்டும். (3 வது தெளித்தல்) இ. பேசிலஸ் சப்டிலிஸ் 5 கிராம் / லிட்டர் 7 நாட்கள் இடைவெளியில் (4 வது தெளித்தல்)மழை இல்லாத நேரங்களில் தெளிக்க வேண்டும். |
| பூண்டு | பூண்டு குமிழ் விளைச்சலை அதிகரிக்க நடவு செய்த 30, 45 மற்றும் 60 நாட்களில் நீரில் கரையக்கூடிய நுண்ணூட்டச் சத்து கலவையை ஒரு லிட்டர் தண்ணீருக்கு 0.50 கிராம் என்ற அளவில் இலையில் இடலாம். மழை இல்லாத நேரங்களில் தெளிக்க வேண்டும். |